

பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
இரட்சிப்பின்
பாத்திரத்தை
எடுத்துக்கொண்டு,
கர்த்தருடைய
நாமத்தைத்
தொழுது
கொள்ளு(வோம்)வேன்.
சங் : 116:13
செய்தி மலர்
2019
மே
மலர் : 16
இதழ் : 1



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் நம்மை கண்மனி போல வழிநடத்தின தேவன் வரும் மே மாதத்திலும் நம் கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்திபடுத்தி வழி நடத்துவாராக!

மே மாதம் என்றாலே புதிய ஆசீர்வாதங்களை நம் வாழ்க்கையில் பெற்றுக்கொண்டு தேவனை மகிமைப்படுத்த வேண்டிய ஒரு மாதம். நம் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்று புதிய வகுப்புகளுக்கும், மேற்படிப்புகளுக்கும் செல்ல வேண்டிய ஒரு சூழலில் இருப்பார்கள். புதிய மாறுதல்கள் வித்தியாசமான ஆசீர்வாதங்கள் பெரிய முன்னேற்றங்கள் ஆகியவைகள் நிறைவேறும் ஒரு மாதம். ஆகவே நன்றியறிதலுள்ள இருதயத்தோடு தேவனை நாம் ஆராதிக்க வேண்டியது இந்த மாதத்தில் செய்ய வேண்டிய மிக முக்கிய கடமையாகும்.

தாவீது சொல்கிறான் "கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தை செலுத்துவேன், இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்" (சங்கீ-116:12,13) என்று.

இனி கீழ் வரும் பகுதிகளில் கர்த்தருக்கு ஸ்தோத்திரங்கள் செலுத்துவதினாலே உண்டாகிற நன்மைகளை பார்க்கலாம்.

## 1.ஸ்தோத்திரத்தினாலே கிருபைபெருகும்......

வாழ்க்கையில் எத்தனைதான் இடர்பாடுகள் வந்தாலும் கர்த்தரை சார்ந்து நாம் வாழ்கின்ற பொழுது ஒரு பரிபூரண கிருபையை தேவன் நம் வாழ்க்கையில் வைத்து அரிய பெரிய சாதனைகளை நம் மூலம் நிறைவேற்றுகிறார். அதனால் தான் தேவ மனிதர்கள் தங்கள் பாடுகள் மத்தியிலும் தேவனை ஸ்தோத்தரித்து ஜெயம் பெற்றார்கள். மற்ற எவருக்கும் கிடைக்காத ஒரு ஆசீர்வாதத்தை ஒருவன் பெறுவதுதான் கிருபை என்னப்படுவது. மரியாளை தூதன் ஆசீர்வதிக்கும் பொழுது பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் என்றான். (லூக்-1:30) காரணம் இந்த உலகத்தில் எந்த பெண்ணுக்கும் கிடைக்காத பெரும் பாக்கியம் மரியாளுக்கு கிடைத்தது.

அது போலவே நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி-6:8) அதற்கு காரணம் அவன் பேழையை விட்டு வெளியில் வந்தவுடன் முதலாவது கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியை செலுத்தி தேவனை தொழுது கொண்டான் எனப் பார்க்கிறோம். இப்படி தேவனை எப்போதும் ஸ்தோத்தரிக்கிற அனுபவம் நோவாவுக்கு இருந்தது.

தாவீதும் கூட கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். (சங்கீ-34:1) என மிக இக்கட்டான சூழ்நிலையில் பாடினான். அதனால் தான் அவன் வாழ்க்கை முழுவதும் கிருபைகள் காணப்பட்டது.

அதே போல கை கால்கள் தொழு மரத்தில் கட்டப்பட்ட நிலைமையிலும் பவுலும் சீலாவும் தேவனை துதித்துப் பாடினார்கள். அதனால் அவர்களும் விடுதலை பெற்றதோடு சிறைச் சாலை தலைவனையும் இரட்சிப்புக்கு நேராய் வழிநடத்த முடிந்தது. பாடுகளிலும் பாடக்கூடிய கிருபையை தேவன் நமக்கு தருகிறார்.

மோசே சொன்னார் நாங்கள் "எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும் எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதி படுத்தும்" (சங்கீ-90:14,17) என்று.

தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாக கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது. (2-கொரி-4:15) ஆகவே பாடுகள் வருத்தங்கள் நமக்கு ஒரு பொருட்டல்ல. நம்முடைய ஸ்தோத்திரங்கள் ஜெயத்தை கொண்டு வரும் இதுவே தேவனுடைய கிருபை அல்லேலூயா.

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கி போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவு அடைகிறதில்லை, துன்பப்படுத்தப்பட்டும் கை விடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. (2-கொரி-4:8,9) இதுவே தேவனுடைய கிருபை.

## 1.ஸ்தோத்திரத்தினாலே வெற்றி கிடைக்கும்....

யோசபாத் என்ற அரசன் யுத்தகளத்தில் ஆயுதங்கள் இல்லாமல் வெறுங்கையாய் நின்ற பொழுது "கர்த்தரை துதியுங்கள் அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரை பாடவும், துதிக்கவும் பாடகரை நிறுத்தினான். அவர்கள் பாடி துதி செய்யத் தொடங்கின போது யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலை தேசத்தாரையும் ஒருவருக்கு விரோதமாய் ஒருவரை கர்த்தர் எழும்ப பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்" (2-நாளா-20:21,22)

நாமும் கூட நெருக்கமான சூழ்நிலைகளில் உதவியற்ற நிலைகளில் நிர்கதியாய் தவிக்கும்பொழுது தேவனை நோக்கி ஸ்தோத்திரங்களை சொல்லி பாடல்களை பாடுகின்ற பொழுது பரத்திலிருந்து தேவன் நமக்கு வெற்றியை பரிசளிக்கிறார். அதனால் தான் தாவீது சொல்கிறான் "எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு

நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" (சங்கீ–121:1,2) என்று.

## 2. ஸ்தோத்திரத்தினாலேநம்ஜெபங்கள் கேட்கப்படும்..

வேதம் கூறுகிறது "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்போது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்" (பிலி–4:6,7) என்று.

எல்லாவிதமான போராட்டமான சூழ்நிலையிலும் பவுல் அப்போஸ்தலன் ஸ்தோத்திரத்தோடே கூட எல்லாவற்றையும் ஜெபத்திலே தேவனுக்கு தெரியப்படுத்த தவறவில்லை. அதனால் தான் அவன் சொன்னான் "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" (பிலி–4:13) என்று. இயேசு கிறிஸ்துவும் கூட இரவெல்லாம் கண் விழித்து ஜெபித்தார். வனாந்திரங்களுக்கும் மலைகளுக்கும் தனியாக சென்று ஜெபத்திலே தரித்திருந்தார். அவர் ஸ்தோத்திர பாட்டை பாடிய பிறகுதான் சிலுவையிலே மரணமடைவதற்காக புறப்பட்டு சென்றார் (மத்–26:30)

ஆகவே பிரியமானவர்களே ஸ்தோத்திரத்தோடே கூட நாம் ஜெபிக்க மறக்க வேண்டாம். யோபு தனக்கு ஏற்பட்ட பயங்கரமான இழப்புகள் மத்தியிலும் கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்துக்கொண்டார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று ஜெபித்தார். (யோபு–1:21) அதனால் பாருங்கள் தான் இழந்த யாவற்றையும் இரட்டிப்பாக அவர் பெற்றுக்கொண்டார். நாமும் ஸ்தோத்தரித்து ஜெபித்து ஜெபங்களுக்கு பதில்களை பெற்றுக்கொள்வோம்.

பிரியமானவர்களே, இந்த மாதத்திலே ஆண்டவர் செய்த எல்லா உபகாரங்களையும் நினைத்து கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துவோம். அப்படி செய்கின்ற பொழுது கிருபைகள் நம்மிடத்திலே பெருகும். நம் கையின் பிரயாசங்களுக்கு வெற்றி கிடைக்கும். நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படும்.

"என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" (சங்கீ–103:1,2)

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரன்

**சகோ. ஸ்டாலின்**

# பழைய மரங்கள்

உலகில் மிகவும் பழமையான மரங்கள் அதிக அளவில் இருப்பது அமெரிக்க நாட்டில் கலிபோர்னியா மகாணத்தில் உள்ள ஒயிட் என்ற பெயருடைய மலைகள்களின்தான். இந்த மலையின் அதிகபட்ச உயரம் சுமார் 10 ஆயிரம் அடியாகும். பனி சூழ்ந்த இந்த மலையில் இருக்கும் பைன் ரக மரங்களின் சராசரி வயது இரண்டாயிரம் முதல் மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

அங்கு இருந்த பிரமீதியஸ் என்ற ஒரு மரத்தின் வயது சுமார் 4900 ஆண்டுகள். மிகவும் பழமையானது என்றதால் அழியும் நிலையில் இருந்த அந்த மரத்தை அமெரிக்க அரசின் அனுமதியுடன் வனத்துறை கடந்த 1964 ஆம் ஆண்டு வெட்டி எடுத்து பதபடுத்தி இன்று வரை பாதுகாத்து வருகின்றது.

தற்போது அங்குள்ள மெத்துசாலா என்று பெயருடைய ஒரு மரத்தின் ஆயுள் சுமார் 4,841 ஆண்டுகள் என்று கணக்கிடபட்டுள்ளது. இந்த மரம்தான் தற்போது உலகில் உயிருடன் இருக்கும் மிக பழைமையான மரம். இதனை ஆராய்ச்சியாளரான டாக்டர் எட்மண்ட சக்ல்மென் என்பவர் கண்டுபிடித்தார்.

இந்த பழமையான மரத்தை மனிதர்களிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அதன் இருப்பிடம் குறித்து இன்று வரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஆனாலும் அந்த மரத்தை அடையாளம் காணும் ஆர்வத்துடன் அங்கு செல்லும் சமூக ஆர்வலர்கள் இதுதான் மெத்துசாலா என்று ஒரு குறிப்பிட்ட மரத்தை தேர்வு செய்துள்ளனர்.

உலகில் பழைமையான மற்றொரு மரம் ஸ்ரீலங்காவில் அநுராதபுரத்தில் இருக்கும் அரசமரமாகும். அசோகனின் மகள் சுங்கமித்திரை கிமு 288ல் புத்த மத கொள்கைகளை பரப்பும் நோக்கத்தோடு இலங்கை அரசன் "திஸ்ஸயா வை சந்திக்க வந்த போது அவர்களின் வருகையின் நினைவு சின்னமாக அம்மரம் நடப்பட்டதாம்.

அதே போல ஈரானில் உள்ள சைப்ரஸ் மரம் சுமார் 4000 அண்டுகள் பழமையானதாக கண்டறயபட்டுள்ளது, அத்துடன் இங்கிலாந்து, பிரேசில், ஆப்பிரிக்கா, போன்ற நாடுகளிலும் பழமையான மரங்கள் அதிக அளவில் உள்ளன. சுவீடனில் உள்ள ஸ்புஸ் என்ற மரம் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானது என்று கூறப்படுகின்றது, ஆனால் அதன் வயது !!நிரூபிக்கபடவில்லை.

(நன்றி *மணவாட்டி*)

# கிறிஸ்தவமே தானதர்மம்தான்

கடந்த மாத தொடர்ச்சி–

அதாவது நமது சக மனிதருக்கு செய்ய வேண்டிய கருணை செயல்களை உள்ளடக்கம் போதுதான் நமது நோன்பு இறைவனுக்கு முன் அங்கீகாரம் பெறுகிறது. நமது விருப்பங்களையும் இன்பங்களையும் ஒதுக்கி வைத்து (அல்லது சுவாசித்து) அதினால் தியாக சிந்தையுடன் பாவப்பட்டோருக்கு தேவைபட்டோருக்கும் உதவ நம்மை இயேசு அழைக்கிறார். ஏதோ ஓரிருவேளை சாப்பிடாமல் இருந்து விடுவது முழுமையான உபவாசமல்ல. அது உபவாசத்தின் ஓர் அம்சம்தான்.

உபவாசம் என்பது கிறிஸ்தவத்திற்கே உரியதென்றும் சொல்ல முடியாது. மற்ற மார்கங்களிலும் இப்பழக்கம் உண்டு. உடல் நலத்திற்காகவும் நோன்பு மேற்கொள்ளபடுவதுண்டு. திருவசனத்தின்படியான உபவாசத்தின் தனி சிறப்பு என்ன வென்றால் அது வசதியற்றோரை உயர்த்தும் செயலோடு சம்மந்தபட்டுள்ளதுதான். மருத்துவ உதவி மற்றும் நிவாரண பணிகள் மூலம் கிறிஸ்தவ மிஷனரிகள் மக்களை ஏமாற்றி மதமாற்றம் செய்கின்றனரென்ற சில இந்து வெறியர்களின் குற்றசாட்டிற்கு பதில் கொடுக்கும் வகையில் ஓர் இந்து மேதையே இவ்விதம் கேட்டிருக்கிறார். "இந்து கோவில் பூசாரிகளே நீங்களும் ஏன் கிரஹாம் ஸ்டெயின் போன்று தொழுநோயாளிகளை தொட்டு சிகிச்சையளித்து அல்லது அன்னை தெரேசா போன்று குப்பைத் தொட்டிகளிலிருந்து வேண்டாத குழந்தைகளை தூக்கியெடுத்து பராமரித்து மக்களை மதமாற்றம் செய்ய கூடாது? ஆம் கிறிஸ்துவின் மனதுருக்கத்தை அதே சிந்தனையின்றி காட்ட முடியாது.

அற்புத சுகத்திற்காக உபவாசித்தலை குறித்து கேள்விபத "லொரு படியாகக்கூட சொல்லபடவில்லையே!. வேதமோ தான தர்மத்தின் நேரடி விளைவாக உடல் சுகத்தை பல இடங்களில் வாக்களித்துள்ளது. எளியவருக்கு உதவும்படி சுய வெறுப்புடன் உபவாசம் மேற்கொண்டால் "அப்பொழுது விடியற்கால வெளுப்பு போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்(ஏசாயா 58:8) சங்கீதகாரன் தாவீதின் கூற்றும் இதுவே " சிறுமைபட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கிவான் படுக்கையில் வியாதியாய் கிடக்கிற அவனை கர்த்தர் தாங்குவார். நோய் நீங்கி படுக்கையினின்று அவன் எழும்பும்படி செய்வார். (சங் 41:1,3) மறக்கப்பட்ட சத்தியங்களை திருச்சபைக்கு திரும்ப கொண்டுவர தீர்க்கதரிசிகள் இங்குதான் நமக்கு தேவை. நூற்றுக்கணக்கான பொது மருத்துவர்கள் கண்டுபிடிக்க தவறியவற்றை கண்டுபிடிக்கும் நிருபணர்களே இறைவனது தீர்க்கதரிசிகளாம்.

## 6. பிரசங்கமும் தான தர்மமும்.

கர்த்தருடைய ஆவியானவர் தம்மீது வந்த பிரதான நோக்கத்தை இயேசு சாட்சியாக அறிவித்தார். தரித்திரருக்கு நற்செய்தியை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்ஈஒடுக்கபட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், என்னை அனுப்பினார்" (லூக்4:18) இயேசுவின் மேசியா ஊழியத்தின் முடிவான அடையாளம் "தரித்திரருக்கு சுவிஷேசம் பிரசங்கிக்கபடுகின்றது என்பதே(லூக் 7:22)

துர்பாக்கியமாக இவ்வசனங்களையும் நாம் எழுத்தின்படி எடுத்துக்கொள்ளாமல் இவைகளுக்கு ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிட்டோம். இங்கு எளிமை என்பது ஆவியில் எளிமையை குறிப்பிடபடவில்லை அது பொருளாதார வறுமையையே சுட்டி காட்டுகிறது. தரித்திரம் என்றால் பரம ஏழைகள் எனபொருள்.இயேசுவின் ஊழியம் கைவிடப்பட்டோரைரயும் தாழ்த்தப்பட்டோரையும். குறிவைத்து பரலோகத்தை தரித்திரர்கள் நிரப்புவார்கள். துதியுங்கள் (யாக் 2:5,1 கொரி 1:27,28: மத் 19:23,24)

சுகமளிகப்புக் கூட்டங்களுக்கான அழைப்பிதழ்களிலும் சுவரொட்டிகளிலும் லூக்கா7:22 அச்சிடபட்டிருக்கும் "குருடர் காண்கிறார்கள், முடவர் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுகமடைகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், என்பதை நான் வசதியாக விட்டுவிடுவோம். ஏனெனில் உங்களை ஜெபிப்பதர்க்காகக் கொண்டுவாருங்கள் என்று சொல்ல நமக்குத் துணிச்சல்கிடையாது, ஆனால் தரித்திரம் சுவிசேஷம் பிரசங்கிக்கபடுகிறது. என்பதையும் விட்டதேனோ? நமது கூட்டங்களில் முன் வரிசை நாற்காலிகள் செல்வாக்குடையோராலேயே நிரப்படவேண்டுமென்று விரும்புகிறோமோ? நண்பரே கவனியுங்கள்! நமது சுகமளிப்புகூட்டங்களை பிச்சைகாரர்,தொழு நோயாளிகள் கைவிடபட்டோர் மற்றும் தள்ளபட்டோரால் நிரப்ப நாம் கற்கும்வரை எதிர்பார்க்கும் அளவு அற்புதங்கள் நடக்காது. அன்பில்லையேல் அற்புதமில்லை. உதவியற்றோர்மீதுள்ள மனதுருக்கத்தினாலேயே இயேசுவின் அற்புதங்களில் பெரும்பாலானவை நிகழ்ந்தன. எழுதபட்டுள்ளபடி இயேசுவின் முதல் சுகமளிப்பு அற்புதம் தெருவிலுள்ள தொழு நோயாளி ஒருவனுக்கும், திருச்சபையின் முதல் அற்புதம் ஒரு பிச்சைகாரனுக்கு செய்யபட்டன(மத் 8:1,2,அப் 3:2) இவையெல்லாம் காரணமில்லாதவையல்ல. தங்களது கூட்ட அழைப்பிதழ்களை ஆலய வாசல்களிலே வினியோகிக்காமல் தொழுநோய் மனைகள், பிச்சைகாரர் குடியிருப்புகள், குருடர்–செவிடர்– ஊமையர் பள்ளிகள்,ஊனமற்றோர் மற்றும் மூளை வளர்ச்சி குன்றியோர், இல்லங்களிலும், சாலையோர வாசிகளுக்கும் வினியோகிக்கும்படி சுகமளிப்பு ஊழியரை வருத்தி கேட்கிறேன், இப்படிபட்ட அவதியுறுவோர் இருக்குமிடங்களுக்கே சென்று அன்னாருக்கு ஜெபித்து ஊழியம்

செய்வது இன்னும் மேல், அசாதாரணமானதைச் செய்தால்தான் அசாதாரணமானதைக் காணலாம்.

பேதுருவும் யாக்கோபும் யோவானும் இயேசுவின் சீடர் கூட்டத்தில் உள்வட்டத்தினர். மற்ற சீடனை காட்டிலும் அவர்களுக்கு தங்கள் ஆண்டவரின் மனது கூடுதல் புரிந்திருக்கும் என்பது தெளிவு. அவர்கள் ஆதிசபையில் "தூண்களாகக்"கருதபட்டார்கள். பவுலையும் பர்னபாவையும் யூதரல்லா – தோருக்கும் மிஷனரிகளாய் இத்தலைவர்கள் அனுப்பிவைத்த போது சொன்னதெல்லாம், தரித்திரரை நினைத்து கொள்ளுங்கள்" என்பதுதான். இதை கலாத்திய நாட்டு கிறிஸ்தவருக்குப் பவுல் எழுதுகையில், அப்படி செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாய் இருந்தேன் என குறிப்பிட்டான், (கலா2:9,10) மேய்ப்பர்கள் அல்லது சுவிசேஷகர்கள் அல்லது மிஷனரிகளின் பிரதிஷ்டை ஆராதனைகளில் இவ்விதம் தரித்திரரை மறந்துவிட கூடாதென்ற குறிப்பான ஆலோசனை சொல்லபடுகிதாவென்பது எனக்கு சந்தேகம். நமது ஊழிய திட்டங்களின் முக்கியத்துவத்தை திரும்ப சீராக வரிசைபடுத்துவோம். ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் மற்றும் வன இலாகா அதிகாரிகளின் தப்பும்படி அறியாத ஆதிவாசிகளின் கண்கள் திறக்கபட வேண்டும். திருட்டு வியாபாரிகள் மற்றும் இரக்கமற்ற ஜமீன்தார்களின் கொத்தடிமைகாளாக அவதியுறும் வறியவர் இவ்வித நுகத்தடிகளிலிருந்து அவிழ்கப்பட வேண்டும் தீண்டப்படாதோரெனும் வகுப்பினர் தாங்களும் கடவுளால் உண்டாக்கபட்ட மனிதர்தான் எனும் அறிவிற்குள்ளும் மதிப்பிற்குள்ளும் கொண்டுவரப்படவேண்டும். நற்செய்தியறிப்பானது இவ்விதத் துணிச்சலான இரக்கபணிகளை உள்ளடக்க வேண்டும். இல்லையேல் நுகம் முறிக்கும் அபிஷேகம் நமக்கெதற்கு? (லூக் 4:18,19: ஏசாயா 10:27)

சமூகநல கண்ணோட்டம் இல்லாத ஆன்மீக சுவிசேஷம் உடலில்லாத உயிராகும். ஆன்மீக சத்து இல்லாத சமூகநலசுவிசேஷம் உயிரற்ற உடலாகும். ஒன்று அலைந்து திரியும் ஆவி அடுத்தது வெறும் சடலம் என்றார் பண்டிதர் நு.ஸ்டான்லி ஜோன்ஸ். கிறிஸ்தவமானது முக்கியமாக மூன்று நதிகளாக ஓடுகிறது. பெந்தகோஸ்தே சாராத சபை விசுவாசிகள், புராதான திருச்சபை கிறிஸ்தவர்கள், பெந்தகொஸ்தே சபையினர். முதல் வகுப்பினராகிய பெந்தகொஸ்தே சபை விசுவாசிகள் "வசனத்தில்" திடமானவர்கள். வேத வியாக்கியானங்கள் ஆராய்ச்சி வேதங்கள் மற்றும் வேதாகம ஆய்வுகளில் ஏறத்தாழ 75 சதவீதம் இவ்வகுப்பிலிருந்தே வெளிவருகிறது. புராதான சபையினர் பொதுவாகத் தானதர்மம் "செயல்களில்" வல்லவர்கள். ஆனாதை இல்லங்கள்,கல்வி கூடங்கள், மருத்துவமனைகள், நிவாரணபணிதிட்டங்கள் போன்றவை இவர்களது சாதனைகளுக்கு எடுத்து காட்டுகள். மூன்றாவது பிரிவாகிய பெந்தகொஸ்தே சபையினர் இயல்பாவே "அற்புத அடையாளங்களை"

வற்பறுத்துவர். பவுலை கேட்டால்"பூரண சுவிசேஷம்" என்றால் "வார்த்தை.. செய்கை..அற்புத அடையாளங்கள்" ஆகிய மூன்றும் பொருத்தமான விகிதத்தில் கலந்திருப்பதே என்பார் (ரோ 15:18,19)சபை பிரிவுகள் ஒன்றுக்கொன்று எவ்வளவாய்த் தேவை! ஒருவரது பலம் அடுத்தவரது பலமின்னைமயால் உதவும்.

## 7. இரண்டாம் வருகையும் தானதர்மமும்.

Y2K எனும் பிரச்சனை குறித்துக் கனினீ பொறிவுலகம் வெகுவாய்க் கலங்கிகொண்டிருந்து வேளையில், கிறிஸ்தவர்காகிய நாமோ நமது நேசரின் வருகையைக் களிப்புடன் எதிர்பார்து நின்றோம். ஆயினும், அவரது வருகையில் நாம் வெட்கப்பட்டு போகாதபடி, நமது நித்தியத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரியம் ஒன்றை கவனிக்க தவறிவிட கூடாது. அது தான தர்மத்தை பற்றியது. அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது செல்வந்தருக்கு "கட்டளையிடு" என எச்சரித்ததிலிருந்து அதின் முக்கியத்துவம் தெளிவாகிறது. "அவர்கள் நன்மை செய்யவும், நற்செயல்களில் செல்வந்தர்களாகவும், தாராளமாய் கொடுக் கிறவர்களும், உதாரணகுணமுள்ளவர்களாயிருக்கவும் கட்டளையிடு" (1 தீமோ 6:17-19)

ஆண்டவராகிய இயேசுவும் அவரது அப்போஸ்தலரும் பணக்காரர் மீது கடுமையாகவே இருந்தனர். என புதிய ஏற்பாட்டில் எங்கும் காண்கிறோம். தங்களுக்கு அவ்வளவு பணம் இல்லை என்பதால் பணக்காரர் மீது அவர்கள் அவ்விதம் கண்டிப்பாயிருக்கவில்லை. மாறாக, இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளபடவேண்டிய பணம் பதுக்கபடுவதிலுள்ள அபாயத்தை அவர்கள் நன்குனர்ந்திருந்தார்கள் நமது தேவைக்கு மேல் கடவுள் நமக்கு கொடுப்பாரானால் அது தேவையுள்ளோருக்கு கொடுப்பதற்காகவே. அளவுக்கு மீறி பணத்தை குவித்து வைப்பதற்கெதிரான கடினமா எச்சரிப்பு ஒன்று யாக்கோபுவிடமிருந்து வருகிறது, "செல்வந்தரே, கேளுங்கள் உங்களுக்கு வரப்போகும் இழிநிலையை நினைத்து அலறியழுங்கள்.. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருபிடித்துவிட்டன, அந்த துருவே உங்களுக்கு எதிர்சான்றாக இருக்கும்.. இவ்வுலகில் நீங்கள் ஆடம்பரமாய் வாழ்ந்து, சுக போகத்தில் ஊழன்றீர்கள்.. இதோ நியாதிபதி வாசற்படியில் நிற்கிறார்" (யாக் 5:1-9). நித்திய நோக்குடன் நாம் வாழ்ந்தால் பணத்தை குறித்து நமது மனபான்மையே புரட்சிகரமாய் மாறிவிடும்.

ஏழை லாசரு மற்றும் அந்த செல்வந்தனின் கதையை கவனியாது இக்கட்டுரையை முடிப்பது நன்றன்று (லூக் 16:19-31)செய்ய தவறியவை என்னும் பாவங்களே அச்செல்வந்தனை நரகத்தில் ஆழ்த்துவதற்கு காரணமாயிருக்குமென அவன் கனவிலும் நினைத்திருக்க மாட்டான். அவனது சாப்பாட்டு மேசையிலிருந்து விழுந்த சோற்று பருக்கைகளுக்காக ஏழை லாசருவோடு போட்டிபோட்ட தனது நாய்களையாவது அவன் விரட்டியிருக்கலாம்,

## "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; " (ஆதி – 12:2)

### இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
செல்வி. அல்கா ஹஸ்னி நடராஜன்
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
செல்வி. ஆனாஸ்டினா கமலதாசன்
செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்
செல்வி. சித்ரா ராஜன்
செல்வி. பியூலா ஜெயக்குமார்
செல்வி. ரீமாரோஸ் எபநேசர்
செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
செல்வி. மீனா குமாரி சுகுமார்
செல்வி. தெபோரா ஆமோஸ்
செல்வி. ஜோயல் சுஜின்

செல்வன். பெனின் லாஸ்லோ
செல்வன். பிரவீன்குமார் சாமுவேல்
செல்வன். நரசிம்மன் பாண்டியன்
செல்வன். பினாயா டேனியல் குமார்
செல்வன். டோனி ராமூர்த்தி
செல்வன். சாம் ஜோதி பாண்டியன் ஜெபராஜ்
செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வன். ஏபெல் ராஜ் எபநேசர்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
செல்வன். கதிரவன் சுகுமார்
செல்வன். ஜோஸ்வா சுஜின்

சகோதரி. மரிய குளோரி தாஸ்
சகோதரி. தேவி கிருபை ஜெகன்
சகோதரி. கேத்ரின் சுகன்யா வினீஷ்
சகோதரி. சஜின் ஜீவா /பிரான்கிளின்
சகோதரி. எலிசபெத் ஸ்டாலின்
சகோதரி. ஹெலன் ஷீபா ராபின்ராஜ்
சகோதரி. ஜெயலஷ்மி கொம்மையன்
சகோதரி. பாமினி அருள்

சகோதரி. தங்க மெல்பா தாசையா
சகோதரி.மஞ்சுளா கிதியோன்
சகோதரி. நான்ஸி கிறிஸ்டினா டேனியல்
சகோதரி. குமுதினி வில்சன்
சகோதரி. கிரேஸ் டெய்ஸி சுதாகர்
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. சவரியம்மா அந்தோனிசாமி
சகோதரி. லலிதா பாபு
சகோதரி. லதா சுஜின்

சகோ. ஜெபசிங்
சகோ. ஸ்டீபன். T
சகோ. பிபின் தேவதாஸ்
சகோ. எபெநேசர்
சகோ. ஜோன்ஸ் ராஜ்
சகோ. கலியமூர்த்தி
சகோ. ராஜேந்திரன்
சகோ. சாமுவேல் தாசையா
சகோ. தர்மர்
சகோ. ஜேக்கப் சுந்தர் சிங்
சகோ. கொம்மையன்
சகோ. கிதியோன் பாலமுருகன்
சகோ. ராஜவேல்
சகோ. ஜோஸ் யோசுவா
சகோ. அந்தோனி சாமி
சகோ. விஜயன் .T
சகோ. ஆசீர்வாதம்
சகோ. ஜோன்ஸ் செல்வாசிங்

### இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி ௵ திரு. பெபிட் செல்பின்
திருமதி ௵ திரு. டேவிட் பாஸ்கரன்
திருமதி ௵ திரு. எபநேசர்
திருமதி௵ திரு. சுஜின் ஹாக்கல்
திருமதி௵ திரு. ஞான ஜெபசிங்
திருமதி ௵ திரு. ஸ்டாலின்
திருமதி ௵ திரு. வில்சன். M
திருமதி ௵ திரு. எட்வின் சாம்
திருமதி ௵திரு. கிரன் குமார்
திருமதி௵திரு. அந்தோனிசாமி
திருமதி ௵ திரு. சுபின் சிங்
திருமதி ௵ திரு.கண்ணன் ஜெபராஜ.

திருமதி ௵ திரு. தாமஸ்
திருமதி ௵ திரு. ஜோன்ஸ் ராஜ்
திருமதி ௵ திரு. கொம்மையன்
திருமதி ௵ திரு. ஜாண் மில்லர்
திருமதி ௵ திரு. ஆல்வின் ஜூலியஸ்
திருமதி ௵ திரு.ஜாண்போஸ்கோ(ஜாய் ஷகினா)
திருமதி ௵ திரு. எட்வர்ட் சந்தோஷ்
திருமதி ௵ திரு. பிரேம்குமார்
திருமதி ௵ திரு. பால் பாண்டியராஜ்
திருமதி ௵ திரு. ஜெயசேகர்
திருமதி ௵ திரு. கிறிஸ்டோபர் .M
திருமதி ௵ திரு. வினீஷ்(காத்ரீன் சுகன்யா)

# 2019 மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/05/2019 | சகோ. ஆரோக்கிராஜ் | சகோ. ஜெயசேகர் |
| 12/05/2019 | சகோ. சுகுமார் | சகோ. ஐசக்துரை |
| 19/05/2019 | சகோ. தாமஸ் | சகோ. ஜெகநாதன் |
| 26/05/2019 | சகோ. ஜினு | சகோ. பிரசாத் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/05/2019 | அறுப்பின் பண்டிகை | |
| 10/05/2019 | சகோதரிகள் சிறப்பு ஆராதனை | |
| 17/05/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/05/2019 | வாலிபர்கள் சிறப்பு ஆராதனை | |
| 31/05/2019 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. ஆரோக்கியதாஸ் |

**அறுப்பின் பண்டிகை**
3/05/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(மாலை ஆராதனைக்கு பின் )

**பொதுமன்ற கூடுகை**
7/06/2019 (இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )

**முழு இரவு ஜெபம்**
9/05/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

**31/05/2019 வாலிப ஐக்கிய கூடுகை**
நேரம் 6:30 ழ 8:30(இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
(வேத வினா பகுதி ஓசியா,யோவேல் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )

அல்லது கட்டிவைத்திருக்கலாம் தனது தவற்றை அவன் உணர்ந்தது உண்மைதான் ஆனால் பிந்திபோயிற்று.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான திருச்சபையோரே கிறிஸ்தவம் என்பது தானதர்மம் என்று 7 பகுதியாக பிரித்து நாம் தியானித்தோம். வேதம் அதை பற்றி என்ன நமக்குள் பேசியது ஆவியானவர் நமக்கு இதன் மூலமாக எதை கட்டளையிடுகிறார் என்பதை ஏறக்குறைய நாம் அறிந்திருப்போம் அவரின் கற்பனைகளையும் கட்டளைகளையும் கைகொண்டு நாம் வாழ நம்மை நாம் ஆயத்தபடுத்துவோம் ஆண்டவரின் ராஜ்ஜியத்தில் பங்கெடுக்க ஆயத்தமாவோம். தேவன் அவரது ஐசுவரியத்தால்நம்மை நிரப்பி அவரின் ஆசிர்வாதத்தால் அலங்கரிப்பாராக ஆமென்

(நன்றி Blessing Magazine)

# டேவிட் ரூ அடா லீ

மிஷனெரி வாழ்வில் ஒரே நாளில் தங்களது ஆறு பிள்ளைகளையும் இழக்கக்கொடுத்தும், ஊழியத்தில் இறுதிவரை நிலைத்து நின்ற மிஷனெரிக் குடும்பம் டி.ஹச். லீ குடும்பம். இந்த பேரிழப்பு வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை. இந்தியாவில் டார்ஜிலிங் என்ற இடத்தில், 1889, செப்டம்பர் 24-ம் தேதி நிலச்சரிவு ஏற்பட்டது. மிஷனெரி லீயின் ஆறு பிள்ளைகளும் டார்ஜிலிங்கில் ஒரு வீடு எடுத்து, தங்களது படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்க, பெற்றோர்கள் வறுமையினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த வங்காளம் பகுதியிலுள்ள கொல்கத்தாவில் மிஷனெரிப்பணி புரிந்துகொண்டிருந்தனர். ஆறு பிள்ளைகளையும் இழக்கக் கொடுத்த மிஷனெரித் தாயான திருமதி அடா லீ அமெரிக்காவிலுள்ள வட வெரிஜீனியாவின் அழகிய மலைப் பகுதியின் சுமித்டன் நகரில் 1856-ம் ஆண்டு மார்ச் 23-ம் தேதி ஒரு ஈஸ்டர் தினத்தில் பிறந்தார்.

இவரது குழந்தைப் பருவத்தில் உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருந்ததால் இவரது குடும்பம் அதிக வறுமை கடன் பிரச்சனையால் கஷ்டப்பட்டது. படிக்க வேண்டும் என்ற வாஞ்சை இருந்தும், இலவசக் கல்வி வசதியின்மை, அருகில் பள்ளி இல்லாதது போன்ற காரணங்களால் படிக்க முடியவில்லை. தனது 14-வது வயதில் தனது அத்தையின் உதவியினால் அவர்களது வீட்டிலே தங்கி கல்லூரிப் படிப்பை தொடர ஆண்டவர் அடாவுக்கு அனுக்கிரகம் செய்தார். தனது கல்லூரி நாட்களில் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

ஆண்டவருக்காக நான் எங்குவேண்டுமானாலும் போவேன் என்று உறுதியளித்து தனது வாழ்க்கையைப் பரமபிதாவின் கையில் அர்ப்பணித்தார். ஒரு சாட்சியுள்ள வாழ்க்கையுடன், திருச்சபையின் பணிகளிலும் ஆத்தும ஆதாயப்பணியிலும் ஈடுபட்டார். மிஷனெரிப் பணிகளை நன்றாக அறிந்துகொள்ள பழம்பெரும் மிஷனெரிகளின் சரிதைகளை வாங்கி ஆவலுடன் வாசித்தார். 1874-ம் ஆண்டு ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தபோதும் உள்

மனதில் இந்தியாவிற்கு மிஷனெரியாகச் செல்ல தான் அர்ப்பணித்ததை அவர் மறந்துவிடவில்லை. அடாவின் தாய் தனது மகளின் அர்ப்பணிப்பை அறிந்திருந்தும் தன்னுடனேயே அவள் இருக்கவேண்டும் என்றே விரும்பினார்கள். ஆனால் அழைத்த தேவன் உண்மையுள்ளவர். இவருக்கு ஊழியப்பாதையில் திறந்த வாசலைத் திறந்தார்.

நியூயார்க்கிலுள்ள அமெரிக்க ஐக்கிய மிஷனெரி ஸ்தாபனம் கிழக்கு தேசத்திற்கு பெண்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்ல பெண் மிஷனெரிகளை அனுப்பத் தீர்மானித்தது. அவ்வியக்கச் செயலாளர் அடா ஜோன்ஸை கல்லூரி நாட்கள் முதலே அறிந்து இருந்ததால், இன்னும் 3 வாரத்துக்குள் கடற்பயணத்திற்கு ஆயத்தமா இருக்கச் சொன்னார். இவர்களது கப்பல் 1876–ம் ஆண்டு டிசம்பர் 22–ம் தேதி வந்தடைந்தது. உடனே அடா ஜோன்ஸ் கொல்கத்தாவிற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். வங்காள மொழியை நன்றாகக் கற்றுக்கொண்டாா. அலகாபாத் நகரத்தில் வங்காள பெண்கள் மத்தியில் பணிபுரிய ஆரம்பித்தார்.

இவருடன் கல்லூரியில் படித்த டேவிட் லீ என்பவர் வேறொரு மிஷனெரி இயக்கம் மூலம் இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்து லக்னோ பகுதியில் ஊழியம் செய்துகொண்டிருந்தார். இருவரும் ஒருவரையொருவர் விரும்ப, டேவிட் லீயுடன் அடா ஜோன்ஸ் திருமணம் 1881–ம் ஆண்டு சென்னையிலுள்ள வேப்பேரி மெதடிஸ்ட் ஆலயத்தில் நடைபெற்றது. பிறகு பெங்களூரில் போதகராக டேவிட் லீ பணியாற்றினார். தங்களது முதல் மகள் பிறப்பிற்கு பிறகு டேவிட் லீ அதிக பலவீனப்பட்டதால் நியூயார்க்குக்கு குடும்பமாகத் திரும்பினார்கள். அங்கும் மலேரியாவால் அதிகக் கஷ்டப்பட்டார். ஆனால் இவர்களது இருதயமோ இந்தியாவிற்காக பாரத்துடன் இருந்தது. 1894–ம் ஆண்டு மறுபடியும் தங்களது ஆறு பிள்ளைகளுடன் கல்கத்தா வந்து சேர்ந்தனர்.

அங்கு வறுமையில் வாடிக்கிடந்த வங்காள குழந்தைகளுக்கு சேவை செய்வதற்காக இவர்கள் நியமிக்கப்பட்டனர். 3 வங்காள சிறுமிகளுடன் ஒரு சிறிய விடுதியை ஆரம்பித்தனர். வங்காளத்திலுள்ள நாடியா மாவட்டத்தில் பெரிய பஞ்சம் ஏற்பட்டபோது அதிக அளவில் பட்டினிப் பசிக்குத் தப்ப சிறுமிகள் விடுதியில் சேர ஆரம்பித்தனர். 1899–ம் ஆண்டில் 100 சிறுமிகள் இவர்கள் பள்ளியில் படித்தனர். லீ குடும்பத்தில் ஆறு பிள்ளைகளும் குளிர்காலத்தில் கொல்கத்தாவிலும், கோடைகாலத்தில் டார்ஜீலிங்கிலும் படித்து வந்தனர். தேவபக்தியிலும் ஒழுக்கத்திலும் பிள்ளைகளை வளர்த்து வந்த லீ, இவர்கள் தங்கள் வாழ்வில் கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் எல்லாவிதத்திலும் உதவினர். இவர்களது மூத்த மகள் 17 வயது நிரம்பிய பொறுப்புள்ளவளாக இருந்ததால் அவளது பராமரிப்பில் டார்ஜிலிங்கில் ஒரு வீடு எடுத்து தனது தங்கை தம்பிகளுடன் சேர்ந்து அங்குள்ள கல்லூரி, பள்ளிகளில் படித்து வந்தனர். அவர்களுக்கு உதவி செய்ய ஒரு வங்காளப் பெண்ணும் அவர்களுடன் தங்கியிருந்தாள்.

1899–ம் ஆண்டு 36 மணி நேர அடை மழைக்குப் பின் ஏற்பட்ட புயல் காற்று நிலநடுக்கத்தினால் வீடு அசைய ஆரம்பித்த போது பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே ஓடி வந்தனர். ஆனால் எங்கும் இருட்டு, புயல் காற்றினால் பாதையும் மண் சரிவினால் மூடப்பட்டு இருந்தால் மறுபடியும் வீட்டில் இருந்ததால் பாதுகாப்பு இருக்கும் என்று வீட்டில் நுழைந்து ஜெபித்துக்கொண்டிருந்தபோதே வீடு நிலச் சரிவினால் மண் அடியில் புதையுண்டு போயிற்று, அனைவரும் மரித்தனர். அடுத்த நாள் காலையில் வில்பர் என்ற மகன் மட்டும் குற்றுயிராய்க் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையின் அனுமதிக்கப்பட்டான். அவன் இறப்பதற்குமுன் லீயும் அவரது மனைவியும் இந்த நிலச்சரிவு எப்படி ஏற்பட்டது என்றும் மரிப்பதற்கு முன் தாங்கள் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தது பற்றியும் அவனது வாய் மூலம் கேட்டறிந்தனர். அவனது நல்லடகத்திற்கு பிறகு மனம் பேதலிக்காமல் அழைத்த தேவன் உண்மையுள்ளவர் என்ற வாககுக் கேற்ப மறுபடியும் கொல்கத்தாவிற்கு வந்து தங்களது ஊழியத்தை முழு மூச்சுடன் தொடர்ந்தனர்.

"தேவன் பேரிலுள்ள உறுதியான விசுவாசமும், ஊழியத்திற்கான தைரியமும் அவர்களை தொடர்ந்து தேவப்பணியில் அவர்களை நிலைநிறுத்தியது. 1909–ம் ஆண்டு வெல்லிங்டன் சதுக்கம் என்ற ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டி ஊழியத்திற்காக அதை பிரதிஷ்டை செய்தனர். ஆண்டவர் கிருபையாக லீ தம்பதியினருக்கு மீண்டும் பிராங்க், ஆல்பர்ட் என்ற இரு மகன்களைத் தந்தார். 1924–ம் ஆண்டு டேவிட் லீ சுகவீனப்பட்டு தனது 74–வயதில் மரித்துப்போனார். இவருக்குப் பின் அடாலீ முழு பொறுப்பையும் தைரியத்துடன் எடுத்துச் செயல்பட்டார். வங்காள காசநோய் தடுப்பு இயக்கத்தில் அதிகப் பொறுப்பு ஏற்று தீவிரமாகச் செயல்பட்டதால் அடாலீக்கு அரசாங்கமே தங்க பதக்கம் பரிசளித்து அவரைக் கௌரவித்தது. 1943–44–ல் ஏற்பட்ட வங்காளதேச பஞ்சத்தின் போதும் பசியினால் வாடிய 522 குழந்தைகளை ஆதரித்தனர். இவர்களது விடுதியில் படித்த அனைத்துப் பிள்ளைகளும் சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு மாற்றப்பட்டார்கள். ஒருவர் பிஷப்பாக மாறினார். 3 சிறுமிகள் கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியராகவும், பலர் ஆசிரியர்களாகவும் மாறினர். பல சிறுவர்களின் மாற்றத்திற்குப் பின்னணி லீ தம்பதியினரின் விசுவாசமும், தேவ பணிக்காக அர்ப்பணித்த அவர்களது வாழ்வுமே.

1948–ம் ஆண்டு ஜீன் மாதம் 11–ம் தேதி அடா லீ தேவனுடைய ராஜ்ஜியம் சேர்ந்தார். இவர்களது பெயரிலே லீ ஞாபகார்த்த மிஷன்
"The lee Memorial Mission" என்ற ஊழியம் தொடர்கிறது.

கர்த்தரின் பணியில்
சகோ. S.சுகுமார்

# 2019 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில்

1. சவுல் தாவீது I சாமு 24:17
2. தாவீது நாபால் I சாமு 25:21
3. பெலிஸ்தர் I சாமு 31:9
4. கோலியாத் I சாமு 17:51
5. அபிகால் I சாமு 25:25
6. பாறைகள் I சாமு 14:4,5
7. சாமுவேல் I சாமு 2:18,19
8. சவுல் I சாமு 15:30 ,26:21
9. சாமுவேல் I சாமு 12:23
10. சவுல் I சாமு 26:21
11. தாவீது I சாமு–17:34–36
12. தோவேக்கு I சாமு–22:12–18
13. கோலியாத் I சாமு–17:4,5
14. நானூறு பேர் I சாமு–30:17
15. இஸ்ரவேலர் I சாமு–7:5,6

## உங்களுக்கு தெரியுமா?

1. சிங்கபூருக்கு ஆண்டுதோறும் சூதாட செல்பவரின் எண்ணிக்கை ஒரு கோடி. அதனால் ஆண்டு வருமானம், 4,396 மில்லியன் (அதாவது 18 ஆயிரம் கோடி ரூபாய்)
2. மண்புழுக்களுக்கு 5 இருதயங்கள் உண்டு.
3. விண்வெளி வீரர்கள் பாதத் தடங்கள் அழியாமல் என்றும் நிலவில் நிலைத்திருக்கும், அங்கே காற்று இல்லாததே காரணம்.
4. தேள்களுக்கு 10 கண்கள் இருப்பினும் பார்வை தெளிவிருக்காது.
5. டால்பின்கள் கண்களைத் திறந்தபடியே தூங்கும்.

நன்றி ( *மணவாட்டி*)

## 2019 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. செலின் டேவிட் ஜெயகுமார்
Sis. ஜோனா அசோக்குமார்
Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis. அனிதா திவ்யராஜ்
Sis. ஹெலன் சாஜிதா ராபின்

## கடந்த மார்ச் மாத வேதவினா விடை எழுதி விடுபட்டவர்கள் பெயர்கள்

Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis. ஷீபா பிரசாத்

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. ( 2 கொரி 3:17)

## 2019 மே மாதத்திற்கான வேத வினா!

1.வெள்ளி பாத்திரங்களும்,பொற்பாத்திரங்களும்,வஸ்திரங்களும், ஆயுதங்களும்,கந்தவர்கங்களும், குதிரைகளும்,கோவேறு கழுதைகளும், காணிக்கையாக கிடைக்கபெற்றது யாருக்கு? கொடுத்தது யார்?

2. கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்து கொள்ளும் என வேண்டிகொண்டவன் யார்?

3. நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன் என்றவன் யார்?

4. கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய தன் புருஷனை தூண்டிவிட்ட ஸ்திரீ யார்?

5. சமாரிய மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்கி அந்த மலையின் மேல் ஒரு பட்டணத்தை கட்டினது யார்?

6. "நான் பூலோகத்தோர் யாவரும் போகிற வழியே போகிறேன்" என்றவன் யார்?

7. முன்னூறு கேடகங்களை பொன் தகட்டால் செய்தவன் யார்?

8. கந்தவர்கங்களையும், பொன்னையும், இரத்தினங்களையும், ஒட்டகங்கள் மேல் ஏற்றி கொண்டு வந்தவன் யார்?

9. ஒரு விதவையிடம் குடிக்க தண்ணீர் கேட்டவன் யார்?

10. எரிகோவை திரும்ப கட்டினதினால் தன் இரு குமாரரை சாக கொடுத்தவன் யார்?

11." அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தை போல் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாய்யிருக்கவில்லை" அவன் யார்?

12. புது சால்வையை போர்த்தி கொண்டிருந்தது யார்?

13. அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாய் இருந்தது" அவன் யார்?

14. சத்துருக்களை கண்டு பயந்து கூக்கிரலிட்ட ராஜா யார்?

15. அலங்கம் இடிந்து விழுந்து செத்தவர்கள் எத்தனை பேர்?

விடைகளை வருகின்ற 20-05-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps # 66015503 என்ற எண்ணிற்கு அனுப்பவும்) விடைகளை வேதாகமத்தில் 1-இராஜாக்கள் 2,10,11,15,16,17,19,20,21,22. ஆகிய அதிகாரங்களில் இருந்து பதிலைத் தேடுங்கள் )

**தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -**

மத்தேயு 7:7

# பரிந்து பேசுங்கள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான திருச்சபை விசுவாச குடும்பங்களுக்கு என அன்பின் வாழ்த்துக்கள்., ஆண்டவருடைய பெரிதான கிருபையால் இந்த மாதாந்திர செய்தி மலர் மூலமாக ஆண்டவருடைய வார்த்தையை பரிந்து பேசுங்கள் என்ற தலைப்பில் பகிர்ந்தளிக்க தேவன் பாராட்டிய இரக்கத்திற்கு தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! நமது பிள்ளைகளுக்காக தேவனிடத்தில் பரிந்து பேச ஜெபிக்க பெற்றோரை போல் வேறு ஒருவாராலும் கூடாது. ஏனென்றால் பெற்ற பிள்ளையுடன் உறவும், நெருக்கமும் பாசமும் பெற்றோருக்கு அதிகம், பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகள், சுபாவம்,சரீர பெலன், ஞானம், புரிந்து கொள்ளும் திறன், இவை அனைத்தையும் நன்றாய் தெரிந்திருப்பது தாயானவளே. பிள்ளைகளை நன்றாய் புரிந்து எதிர்காலத்தையும் அறிய தேவனிடம் விசாரித்து பரிந்து பேச வேண்டியது தாய்தான். என் பிள்ளை செய்துள்ள தவறுக்கு தேவனிடம் இரக்கத்தை நாம் எதிர்பார்க்க முடியாது ஆனாலும் பாவம் செய்த தாவீக்கு இரங்கி மன்னித்தீரே, யாக்கோபை சிநேகித்து திருத்தினீரே என்று வேதத்தின் ஆதாரத்துடன் நம்மை தாழ்த்தி பிள்ளைக்காய் போராடி ஜெபிக்க வேண்டும்.

விருந்து கொண்டாடும் தன் பிள்ளைகள் தண்டனை பெறுவார்களே, என எண்ணி யோபு தன் பிள்ளைகளுக்காக தேவனை சமாதானப்படுத்தும் வண்ணம் அவர்களுக்காக பலி செலுத்துகிறார்.

## துதி செலுத்துங்கள்

"நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள்" ( கொலே 3:15)என்று வேதம் கூறுகிறது. தேவனிடத்தில் இருந்து நாம் பெறும் ஒவ்வொரு நன்மைக்கும் நாம் நன்றி செலுத்த வேண்டும்

நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட எல்லா நன்மையிலும் மிக மேன்மையான ஈவு பிள்ளைகளே. எனவே பிள்ளைகளுக்காக நாம் தேவனை துதிப்பதே ஏற்றது.

## தேவனிடம் பேசுங்கள்

தேவன் தந்த சுதந்திரமாகிய நம் பிள்ளைகளுக்காக நாம் பள்ளியில் கல்லூரியில் ஆசிரியர்களிடம் பேசுகிறோம் சபை ஊழியர்களிடம் பேசுகிறோம், மருத்தவரிடம் ஆலோசிக்கிறோம். இவை எல்லாவற்றிலும் பேசுவதே (ஜெபிப்பதே) சிறந்ததும் முக்கியமானதாகும்,

பிள்ளைகளுக்காக தேவனிடம் பேசும் அனுபவத்தை மூன்று படிகளாக தியானிப்போம்.

## விசாரித்து பேசுங்கள்

ரெபேக்காள் தன் கர்பத்திலே இருந்த பிளகைளுக்காக கர்த்தரிடம் விசாரிக்கும் படி போனாள்" ஆதி 35:22

ரெபேக்காள் தன் கர்பத்தின் கனி வெளி உலகத்திற்கு வரும் முன்னே அவற்றின் எதிர்காலம் குறித்து விசாரிக்கும்படி கர்த்தரிடத்தில் போகிறாள், இன்று அநேக பெற்றோர்கள் குழந்தை பிறந்தவுடன் பிறந்த நாள், நேரம், இவற்றை குறித்து விசாரிக்க ஜோதிடன்,குறிகாரன் இவர்களை நோக்கி இரகசியமாய் விரைகின்றனர். காலங்களையும் நட்சத்திர ராசிகளை எல்லாம் படைத்த சர்வ வல்லவரிடம் விசாரிக்காமல் படைக்கபட்ட வஸ்துக்களை பயன்படுத்தி எதிர்காலத்தை கணிப்பவரிடம் விசாரிக்க ஓடும் கிறிஸ்தவ தாய்மார்களே,வயது முதிர்ந்த இரத்த உறவுகளே உங்கள் மேல் அதிகமாய் ஆக்கினைக்கு உட்படுத்தபடுவீர்கள் ஜாக்கிரதை! எச்சரிக்கையாக இருங்கள்.

மேலும் தினமும் பிள்ளைகளுக்காக ஜெபிக்கும் ஜெப நேரத்தில் அவர்களின் பெயரை சொல்லி ஸ்தோத்திரங்கள் ஏறெடுக்க வேண்டும் பிள்ளைகளை குறித்த நினைவு நமக்கு வரும் போதெல்லாம் பிள்ளைகளுக்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

பிள்ளைகள் கீழ்படியாதவர்களும், அன்பற்றவர்களும், அடங்காதவர்களுமாய் இருந்தால் கூட ஆண்டவர் நீர் எனக்கு தந்த பிள்ளைக்காக ஸ்தோத்திரம் என்று சொல்லி பாருங்கள், பின் உங்கள் பிள்ளையின் வாழ்வில் கொஞ்சம் கொஞ்சமாக மாறுதல் ஏற்படும், நிச்சயமான முன்னேற்றம் உண்டாகும் .தேவன் எல்லாவற்றையும் கண்டிப்பாக மாற்றுவார். பிள்ளைகளின் பாதுகாப்பில் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையில் நிச்சயம் கர்த்தர் ஒரு மாறுதலை காண்பிப்பார்.

இன்றைய ஊழியர்களில் குறிப்பாக திரு பால் தினகரனை குறித்து சகோதரி ஸ்டெல்லாதினகரன் அவர்கள் கூறும் போது அவர் கடந்த கால வாழ்க்கையில் தேவனிடத்தில் நெருங்கி ஜீவிக்காமல் இருந்தார் என்றும் அவர்களுடைய கண்ணீரின் ஜெபம் அவரை மாற்றியது என்றும், தேவன் அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய அற்புதத்தையும் அவரும் அவர் தந்தையை போல பெரிய ஊழியராக தேவன் அவரை பயன்படுத்துகிறதை குறித்து ஒரு சாட்சியில் கூறினார்

இவ்வாறு நாமும் நம் பிள்ளைகளுக்காக தேவனிடம் விசாரிப்போம்,தேவனிடம் பரிந்து பேசுவோம், எப்பொழதும் தேவனுக்கு துதிசெலுத்துவோம்.

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி .டேஃபினி ஜெபசிங்

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு

















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களுக்கு வாகன வசதி தேவைபடும்
பட்சத்தில் நீங்கள்
சகோதரர் ஜான்ஸன் அவர்களை தொடர்பு கொள்ளும்படி
கேட்டுக் கொள்ள படுகிறோம்
அவரது தொலை பேசி எண்

97610275

Private Circulation only